செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 91 நாள் : 14-2-17

## பத்திரிக்கைச்செய்தி

## தட்டம்மை ருபல்லா முகாம் ஆய்வுக்கூட்டம் நாள்:14.02.2017

14.02.2017 இன்று வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகம், காயிதே மில்லத் கூட்ட அரங்கில் தட்டம்மை ருபல்லா முகாமில் 9 மாதம் முடித்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் வரை தடுப்பூசி கொடுக்கப்பட்டதன் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளி, தனியார் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு ஆய்வு மற்றும் ஆலோசனைக்கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் மிகச்சிறப்பாக ஒத்துழைப்பு நல்கிய லிட்டில் பிளவர் மெட்ரிக்குலேஷன் பள்ளி ராணிப்பேட்டை, வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி, வேலூர், சரஸ்வதி மெட்ரிக்குலேஷன் பள்ளி, பனப்பாக்கம் ஆகிய பள்ளி தாளாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கப்பட்டது. மேலும், 50% சதவீதத்திற்கும் குறைவான சாதனை அடைந்த 65 பள்ளிகள் கண்டறியப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. (அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளி, தனியார் பள்ளிகள்). மேற்படி பள்ளிகளில் முழுமையான சாதனை அடைவதற்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள், வேலூர் அவர்கள், சி.எம்.சி.மருத்துவமனையின் குழந்தைகள் நலப்பிரிவு துறைத்தலைவர்கள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் குழந்தைநலப்பிரிவு துறைத்தலைவர், உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர்கள் மற்றும் இந்திய மருத்துவ கழகத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு இந்த முகாம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த முகாமினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய குழந்தைகளுக்கு (9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள்) தட்டம்மை ருபல்லா தடுப்பூசியினை இலவசமாக பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது, இந்த முகாம் 28/2/17 வரை நடைபெற உள்ளது.

14/2/17

துணைஇயக்குநர் சுகாதாரப்பணிகள்
வேலூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்

செ.ம.தொ.அ. 14/2/17
வேலூர்– 9.